
# கிறிஸ்துவின் வசனம்

# Word Of Christ





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

★ ஆகஸ்ட் மாத இதழில் வெற்றி பெற்றவர்கள்

1. சகோதரி ஸ்டெல்லா ஞானம்மாள் - காரியாச்சி திச்சி
2. சகோதரி கனகவள்ளி - M. இராமசந்திராபுரம்
3. சகோதரி மேரியம்மாள் - வத்தலக்குண்டு
4. சகோதரி மேரிஎலிசபெத்கலைவாணி - வத்தலக்குண்டு

ஆகஸ்ட் மாத இதழில் சகோதரிகளே வெற்றி பெற்று உள்ளனர் சகோதரர்களின் முயற்சி போதவில்லை தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் லூக் 10:42 வசனத்தின்படி சகோதரிகளின் முயற்சியை கர்த்தர் இன்னும் அதிகமாக ஆசீர்வதிப்பாராக.

## சிந்தனைக்கு

யார்?
யாருக்கு?
எப்பொழுது?

இந்த கேள்விகளோடு வேதத்தை வாசியுங்கள் அப்பொழுது பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்வீர்கள்

---

நீங்கள் கோவையில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட முகவரியில் நடைபெறும கூட்டங்களில் கலந்துகொண்டு பயன் பெறுங்கள்

---

"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" யோவான் 3:32

இடம்: கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம் 20 சத்தியமூர்த்தி வீதி செம்மேடு காருண்யா (வழி) கோவை.

நாள்: 20-9-96 முதல் 22-9-96 முடிய

நேரம் தினமும் மாலை 6-00 மணி

செய்தியாளர்கள்: சகோ P.R.சாமி (ரேடியோ பிரசங்கியார் "சத்தியவழி" பெங்களூர்)
சகோ S. வெர்ணன் டகலஸ் பெங்களூர்

பஸ் ரூட்: காந்திபுரம் டவுன்பஸ் நிலையம் 14A, 14B, SVT

தொடர்பு முகவரி

S,R, பால் கிறிஸ்துவின் ஊழியர்
கிறிஸ்துவின் சபை
20 சத்தியமூர்த்தி வீதி
செம்மேடு காருண்யா வழி
கோவை 641 114.

★★★

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 5 செப்டம்பர் 1996 கனி 2


RLTV

## அக்கினி கடல் The Lake of Fire

வானத்தையும பூமியையும் உண்டாக்கின தேவன் தமக்கு கீழ்படியாதவர்களை அழிந்துபோடும்படி அக்கினி கடலை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். இக்கருத்தை சிலர் மறுக்கின்றனர். தேவன் எல்லாரையும் இறுதியில் மன்னித்து விடுவார் என்று சொல்லி பாவத்தில் ஜீவித்து கொண்டிருக்கிறார்கள். பரிசுத்த வேதகாமத்தில் யோபு 33:4ல் தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்து திருத்துகிறவரல்லவே என்று வாசிக்கிறோம். யாருக்கு இந்த அக்கினிக்கடல்? இதன் முடிவு என்ன? இதற்கு விடுதலையாக நாம் என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்விகளுக்கு வேதத்திலிருந்து விடை காண்போம்.

வெளிப்படுத்தின விஷேசம் 21:8ல் அக்கினிக்கடல் யாருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக சொல்லப்படுகிறதை பார்க்கிறோம். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கூனியகாரரும், விக்கிரகாரதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம்மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிறகடலிலே பங்கடைவார்கள். பிரியமானவர்களே! மேற்கண்ட காரியங்களை செய்கிறவர்களுக்காக தேவன் அக்கினி கடலை வைத்திருக்கிறார். அநேகர் மரித்த பின் நடக்கப் போவதை யார் பார்த்தது, இன்றைக்கு நாம புசித்து குடிப்போம் என்று சொல்லி பாவத்தோட பாவத்தைக் கூட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிறது இன்றைய மானிட வர்க்கம்.

நம்மை அக்கினிகடலிருந்து மீட்கவந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துலூக்கா 17:28-30ல் லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும், ஜனங்கள் புசித்தார்கள் குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள் கட்டினார்கள். லோத்துசோதமை விட்டு புறப்பட்டநாளிலே

வானத்திலிருந்து அக்கினியும், கந்தகமும்வருஷித்து எல்லா ரையும் அழித்துப் போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும நாளிலும் அப்படியே நடக்கும் என்றார். நம் முடைய முற்பிதாக்களின் காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை ஆண்டவர் எடுத்துக் கூறுவதை பார்க்கின்றோம். அதே நிலைதான் இன்றும் இருந்து வருகிறது. தேவபயமில்லை அவர் சொல்வதை விட்டு சொல்லாத அநேககாரியங்களை செய்து கொண்டு வருகிறார்கள்.

உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதை தறித்துப் போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதை பார்க்கிலும், ஊன-னாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும் மாற் 9:43,44ல் வாசிக்கின்றோம்.பிரியநண்பரே இப்படியிருக்கிறபடியால் நாம் செய்ய வேண்டுவதென்ன? இடறல்களை நம்மை விட்டு அகற்றி பொய்யை களைந்து பிறருடன் மெய்யை பேச வேண்டும். மத் 13:41ல் மனுஷ குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய இராஜ்ஜியத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினி சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். மேலும் மத் 3:10ல் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று சொல்லப்படுவதை வாசிக்கின்றோம். இவர்களுக்கே அந்த அக்கினிக்கடலை தேவன் நியமித்திருக் கிறார்.

அக்கினிக்கடலிலே பங்கடைகிறவர்களின் முடிவு என்னவென்று பார்க்கும் போது மத் 3:12ல் பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் மாற்9:48ல் அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். அவியாத அக்கினியினால் சதாகாலமும் வாதிக்கப்படுவார் கள். அங்கு மனந்திரும்பவோ, கீழ்படியவோ, ஞானஸ்நானம் எடுக்கவோ வாய்ப்பில்லை. வெளி20:12ல் மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்ககண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன

ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகங்களும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் ... அப்பொழுது மரணமும்,பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம் அவரவருடைய செய்கைக்குத்தக்க பலனை முடிவிலே பெறுவார்கள்.

ஐசுவரியவான், லாசரு சம்பவத்தை ஆண்டவர் நமக்கு உணர்த்தும் போது லூக் 16:23 ல் பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிறபோது தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும்,அவன் மடியிலே லாசருவையும் கண்டான்...... என் நாவைக் குளிரப்பண்ணும் படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப் படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவோ அப்படியே தீமைகளை அனுபவித்தான். அதை நினைத்துக் கொள், இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான். நீயோ வேதனைப் படுகிறாய் என்றார். பிரியமானவர்களே! அக்கினிக்கடலில் பங்கடைகிறவர்கள் வேதனைப்படுவாகள் என்பதை இவ் வசனத்தின் மூலம் அறியமுடிகிறது.

அக்கினிக்கடலுக்கு நாம் விடுதலையாக வேண்டுமென்றால் சிலகாரியங்களை உங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

1. தேவனுடைய சித்தத்தை புரிந்து கொண்டு அதன் படி நடக்க பிரயாசப்பட வேண்டும். மத் 7:21

2. கொர்நேலியுவைப் போல தேவனுக்கு பயந்தவர்களுமாய் இருக்க வேண்டும். அப் 10:2

3. எத்தியோப்பிய மந்திரியைப் போல அறிக்கையிட்டு தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும். அப் 8:37-38.

4. அவருடைய சபையில் நீங்கள் ஒரு அங்கத்தினராயிருக்க வேண்டும். அப் 11:26.

5. அவர் உங்களை சபையில் சேர்த்திருக்க வேண்டும் அப் 2:47.

6. ஜீவ புஸ்தகத்தில் உங்கள் பெயர் இருக்க வேண்டும். வெளி 20:15

7. முடிவு பரியந்தம் நிலைத்திருக்க வேண்டும். மத் 24:13.

இப்படியிருப்பீர்களென்றால் கர்த்தர் உங்களை அக்கினி கடலுக்கு தப்புவித்து தம்முடைய பரம இராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொள்வார்.

★ சபை செய்தி:

கர்த்தருக்குச் சித்தமானால் இம்மாதம் வத்தலக்குண்டு பகுதியிலும், கொடைக்கானல் பகுதியிலும், சகோ. பி ஆர். சாமி ரேடியோ பிரசங்கியார் (பெங்களூர்) அவர்களால் ஒருநாள் வேத பாடக்கூட்டம் நடைபெறும்.

★ ஆகஸ்ட் மாத இதழின் விடைகள்:

1. கண்டுபிடியான் பிர 3:11
2. திரிகையின் கல் உபா 24:6
3. நாத்தான வேலை யோ 1:47
4. புபிலியு அப் 28:8
5. சகாயராயிருக்கிறோம் 11 கொரி 1:24
6. ஐயோ!
7. விக்கிரகங்களுக்கும்
8. சத்தியத்தை, கிறிஸ்துவுக்குள்
9. எப்பாப்பிரோதீத்து
10. ஆச்சரியப்படாதிருங்கள்.

## பரலோகம் - HEAVEN

பரலோகம் தேவனுடைய வீடு. அவருடைய பரிசுத்த வாசஸ்தலமென்று வேதாகமம் உரைக்கிறது. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர். இயேசுகிறிஸ்துவும், ஜனங்களைப்பார்த்து பரலோகத்திலிருக்கிற உங்கள பிதா என்று தேவனை குறிப்பிட்டார். பரலோகம், தேவனுடைய சிங்காசனமாகும். அங்கே தேவ தூதர்கள் இருப்பார்கள். வானசேனைகள் தேவனை பணிந்து கொள்ளுவார்கள். இயேசு சொன்னார் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்றார்.

இயேசு, உன்னதமான பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். இப்பூமியில் மனிதனாக அவதரித்து. மனுக்குலம் ரட்சிப்படைய, தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். மரித்தார், அடக்கம் பண்ணினார்கள். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். 40 நாள் அளவும் தம்மை திருஷ்டாந்த

மாக எல்லோருக்கும் வெளிப்படுத்திவிட்டு, பரமேறிச் சென்றார். இப்பொழுது பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்துகொண்டு, நமக்காக பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார். அவர் மீண்டும் வருவார். இம்முறை நம்மை நியாயந்தீர்க்க வரப்போகிறார். இயேசு தாமே இப்புவியில் இருந்தபோது, இந்த வாக்குத் தத்தத்தை கொடுத திருந்தார். ''இதைக் குறித்து ஆச்சரியப்படவேண்டாம். ஏனெனில் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும், அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாயும் புறப்படுவார்கள் (யோவான் 5: 28,29). பரலோகத்துக்குச்செல்ல எல்லாரும் வாஞ்சிப்பார்கள். அவ்வளவு அருமையான இடம்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த விசுவாசிகள் கூட, மேன்மையான பரம தேசத்தையே விரும்பி, பூமியின மேல் தங்களை அன்னியரும், பரதேசிகளும் என்று அறிக்கை யிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள் (எபி. 11:13-15, தேவனுடைய தாசர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு) யாக்கோபு போன்றவர்கள் பரலோக ராஜ்யத்தை அடைய வாஞ்சையோடியிருந்தனர், புதியஏற்பாட்டு கிறிஸ்தவர்கள், உண்மையான விசுவாசிகள், பரலோகத்தில் நித்தியத்தை அனுபவிக்கும் சிலாக்கியத்தை பெற்றிருக்கின்றனர். அதற்காகத்தான் இயேசுவும், பரலோகத்தில் உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள் என்றார். எபிரேய கிறிஸ்தவர்களை, எபிரேயருக்கு எழுதின ஆசிரியர் ''பரம அழைப்புக்குபங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே என்று அழைக்கிறார்.

பவுல், ''நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் ரட்சகர்வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' என்றார். இதுதான் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனின் நம்பிக்கையும், நோக்கமுமாக இருக்க வேண்டும். அதாவது, அழியாததும்,மாசற்றதும்,வாடாததுமாகிய சுதந்திரம் என்று பேதுரு குறிப்பிடுகிறார். ஒரு மிகுந்த ஆஸ்தியுள்ள மனிதனைப்பார்த்து, இயேசு, ''உன்னிடத்தில் ஒரு

குறைவுண்டு. நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு மனமடிந்து துக்கத்தோடே போய் விட்டான்.

இன்றும் அப்படிப்பட்டவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள். இந்த உலகத்தையே சதமென்று எண்ணிக்கொண்டு பரத்தைப்பற்றிய சிந்தை எதுவுமில்லாமல் பூமிக்குரிய காரியங்களையே நம்பிக்கொண்டு தங்கள் ஜீவிய நாட்களை நடத்தி வருகின்றனர். பரலோகம் நரகம் என்பதெல்லாம் வெறும் கற்பனை, மதப்பற்றுள்ளவர்கள், பிழைக்க தெரிந்து கொண்ட ஒரு யுக்தி. இந்த உலகத்திலே பரலோகத்தையும் நரகத்தையும் உருவாக்க முடியும், என்றெல்லாம் கூறிக்கொண்டு தங்கள் சொந்த வழிகளில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

வேதாகமம், தேவனுடைய வார்த்தை. தேவன் பொய்யுரையாத தேவன் பரலோகம், நித்தியமான இடம் வெறும் கற்பனை அல்ல என்று பார்க்கிறோம் பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் அங்கு செல்வான் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் என்று இயேசு கிறிஸ்துவே கூறி இருக்கிறார். ''பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்தியவீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் ஏனெனில் இந்த கூடாரத்திலே நாம்தரித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தை தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம் என்று பவுல், கொரிந்தியருக்கு எழுதிய 2-ம் நிருபத்தில் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவும், தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தில் குறிப்பிட்டதாவது ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில், அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லி இருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக

ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன. நான போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள். வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.

தோமா, அவரை நோக்கி ஆண்டவரே நீர் போகிற இடத்தை அறியோமே. வழியை நாங்கள் எப்படி அறிவோம என்றான். அதற்கு இயேசு ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன. என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்றார். பரலோகம் எப்படிப் பட்ட இடம்என்று வேதம் வர்ணிப்பதை கேளுங்கள். ''அங்கு செல்பவர்கள் பசியடைவதுமில்லை, தாகமடைவதுமில்லை வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை சிங்காசனத்தின மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து இவர்கள் ஜீவதண்ணீருள்ள ஊற்று காணடைக்கு நடததுவார். தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும துடைப்பார்'' (வெளி 7:16,17) இனி மரணமில்லை, துக்கமுமில்லை அலறுதலுமில்லை வருத்தமுமில்லை (வெளி 21:4).

அப்படியென்றால் பூமியிலுள்ள பிரச்சனை எதுவும் அங்கு இருக்காது இதை மனதில் வைத்துத்தான பவுலும், பரலோகத்தை நோககி இருககிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது என்றார் இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவோடு இருக்கும் பாக்கியத்தைப் பெறுவோம் என்று வேதம் சொல்லுகிறது.

இவ்வளவு அருமையான வாக்குதத்தங்களைப் பெற நம்பொருட்டு கிறிஸ்து, இவ்வுலகத்திற்கு வந்து பாடு பட்டார், இம்மையிலும் பரிபூரண ஜீவனையும் மறுமையிலே நித்திய நாளுக்கான நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறார் அருமையான வானொலி நண்பனே! இவ்வுலகில் நாம் இருக்கும் வரை பிரச்சினைகள் நம்மை விட்டு மறையாது எவ்வளவு பிரயாசபட்டாலும், நாம் நினைச்கிற சமாதானத்தை

சந்தோஷத்தை அடைய முடிவதில்லை. இயேசு கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து அவருக்காக இவ்வுலகில் ஜீவிபபதிருல் வரும் சிலக்கியங்களைப் பார்த்தாயா? இன்னும் என்ன யோசிககிருய்? இன்றே கிறிஸ்துவை தெரிந்து கொள அவரை ஏற்றுக்கொண்டு அவர் தரும் சமாதானத்தைப பெற்றுக்கொள இவ்வுலகில் இருக்கும் காலம் வரை அவருககு உண்மையுள்ளவனாக ஜீவித்தால் அவருடைய வருகையிலே நீயும் அவரோடே அந்த பரலோகம் செல்லுவாய்

அவர்உனக்கு உற்ற நண்பனுக, ஆசிரியனுக, ஆசானுக காத்தனுக இருந்து உன்னை வழி நடத்துவார். நீ இடறிவிழும போது உன்னை தாங்குவார். நம்மைப் போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டவர். ஆனாலும் ஒரு பாவ-முமில்லாமல், முழுமையான ஜீவியத்தை நடத்தியவர் இவர் ஒருவர்தான. அவர் தாமே சோதிச்கப்பட்டு பாடுபட்ட தினாலே, அவர் சோதிக்கப்படு கிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருககிறார். அவர் மூலமாக மட்டுமே பரலோகம் செல்ல முடியும.

இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று நீ விசுவாசிக்கிருயா? அப்படி என்ருல் உன் பாவங்களை எல்லாம் விட்டு தேவனிடத்தில் மனந்திரும்பு. இயேசு கிறிஸ்துவை உன் வாயிஞல் அறிக்கை இட்டு பாவமன்னிப்புக்கென்று, ஞானஸ்நானம் பெற்றுக்கொள். நீ புது சிருஷ்டியாக தேவனுடைய குடும்பத்தில் மறுபடியும் பிறப்பாய். ரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும தம் சபையில் சேர்த்துகொண்டு வருகிருர். மரண பரியந்தம் உண்மையுள்ளவனாக இருந்தால் அந்த வாடாத ஜீவ கிரீடத்தைத்தருவார்.

அருமையான வானொலி நண்பனே, நீ தேவ சித்தத்திற்கு உன்னை ஒப்புக்கொடுக்க, உனக்காக ஜெபிக்கிறேன்

வானோலி பேச்சாளர்

பி.ஆர். சாமி

பெங்களூர்.

★ ★ ★

## இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பரிசுத்த வேதாகமத்தில் கிறிஸ்துவின் சபையைப்பற்றி சொல்லப்பட்டுள்ள வசனங்களில் குறைந்த பட்சம் பத்து வசனங்களை ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பு-கிறவர்களுக்கு ஓர் அழகிய சத்தியம் அடங்கிய "சத்திய வழி" புத்தகம் இலவசமாக அனுப்பப்படும்.

---

★ இம்மாத வேத அறிவுப் போட்டி!

1. யாருடைய நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்?

2. நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்றது யார்?

3. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் யாருக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள் என்று பவுல் கூறிப்பிடுகிறார்?

4. தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் என்ன செய்யக்கடவது?

5. கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதின்படி செய்ய-வும் இஸ்ரவேலிலே சட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், யார் தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்?

6. சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து எதற்கு முந்திக்கொள்ளும்.

7. கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வாரப்பண்ணி இரட்சித்து பின்பு விசுவாசியாதவர்களை என்ன செய்தார்?

8. அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் என்ன செய்கிறோம்?

9. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் எப்படியிருக்கிறது?

10. மரணமும் ஜீவனும் எதின் அதிகாரத்திலிருக்கும்?

மேற்கண்ட 10 கேள்விகளில் முதல் ஐந்திற்கு வேத வசன ஆதாரத்துடனும், கடைசி ஐந்திற்கு வேதத்திலிருந்து விடைமட்டும் எழுதி இம் மாதம் 25ந்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி ஒரு அஞ்சல் அட்டையில் அனுப்பவும் சரியான விடை எழுதுகிறவர்களின் பெயர் இதழில் பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர்,

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No. 84661-92
Registerd No TN/DDL/19.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45

கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5, காமராஜபுரம்
கனவாய்பட்டி ரோடு,
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு-624 202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624 202.
S. India

Edited and published by B.Arjunan M.A.,A.Bs.,on behalfof church of Christ 2.2.102D/5 Kanavaipatti Road3TL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624 202.